22nd August 1961]

Government Mental Hospital, Madras

* 1315 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் என்னென்ன விதமான வகுப்புகள் உள்ளன ?

(இ) அவைகளுக்கு சார்ஜு விவரம் ?

(உ) இலவச சிகிச்சை உண்டா ? எந்த வகுப்புகளுக்கு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Three classes, viz., Special Ward 'A' Class, Special Ward 'B' Class and General Ward.

(இ) A statement [a] is placed on the table of the House.

(உ) Persons belonging to Madras State whose income is below Rs. 100 per mensem are treated free of charge in General Wards.

SRI V. K. KOTHANDARAMAN : சாதாரணமாக மக்கள் இந்த ஆஸ்பத்திரியில் இடம் பிடிப்பது என்று சொன்னால், பணம் கொடுத்தால் தான் அங்கே "பெட்" கிடைக்கும் என்கின்ற ஒரு நிலைமை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது விஷயமாக புகார்கள் வந்துள்ளனவா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரியாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் அதைப்பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பாக எழுதி அனுப்பினால், நான் அது பற்றி விசாரிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : அங்கே இருந்த சூப்பரின் டெண்டெண்டு பேரில் இது போன்ற பல புகார்கள் வந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஹைகோர்ட்டு வரைக்கும் போய் இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. அவர் பெயர் மிஸ்டர் ஜார்ஜ் என்று கேள்விப்படுகிறேன். எந்த மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜான்ஸன் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : I think the matter is sub-judice. He has preferred an appeal and it is pending in the High Court.

THE HON. SRI M. A. MANICKAVELU : என்ன நடவடிக்கை என்பது பற்றி பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்குப் பிற்பாடு இப்பொழுது விஷயம் ஹைகோர்ட்டில் அப்பீலில் இருக்கிறது.

SRI A. A. RASHEED : In view of the peculiar nature of the illness, will the Government give free treatment for all those seeking admission?

THE HON. SRI M. A. MANICKAVELU : People drawing Rs. 100 and less are given free treatment. For rich people, why should there be free treatment? The cost and the expenditure of the hospital have to be borne in mind.

---

[a] Printed as Appendix II on pages 609-610 infra.